செய்திப் பணிப்பாளர்/ செய்திப் பதிப்பாசிரியர் ஜனவரி 23, 2017

# செய்தி வெளியீடு

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (அடிப்படை 2013=100) ; டிசம்பர் 2016

## தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்

## தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அறிக்கை வெளியிடுகையில், தொகைமதிப்பு, புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி. அமர சத்தரசிங்ஹ அவர்கள், 2016 டிசம்பர் இற்கான தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருடம் பணவீக்கம் 4.2% ஆக கணிக்கப்பட்டது. 2016 நவம்பர் இல் பணவீக்கம் 4.1% ஆக இருந்ததெனவும் தெரிவித்தார். 2016 டிசம்பர் இல், உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்கத்திற்கான பங்களிப்பு முறையே 1.06%, 3.18% ஆக காணப்பட்டன.

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம், 2016 டிசம்பர் இற்கான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை வெளியிட்டுள்ளது. 2016 டிசம்பர் இற்கான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் 118.0 என கணிப்பிடப்பட்டுள்ளது. இது கடந்த மாத (நவம்பர்) சுட்டெண்ணான 116.6 உடன் ஒப்பிடுகையில் 1.4 சுட்டெண் புள்ளி அல்லது 1.2 சதவீத அதிகரிப்பைக் காட்டுகிறது. இது உணவுப் பொருட்களின் செலவுப் பெறுமதி 1.25% அதிகரிப்பினாலும் மற்றும் உணவல்லாப் பொருட்களின் செலவுப் பெறுமதி 0.08% வீழ்ச்சியினாலும் ஏற்பட்டதாகும்.

நவம்பர் 2016 உடன் ஒப்பிடுகையில் 2016 டிசம்பர் இற்கான உணவுப் பொருட்களின் செலவுப் பெறுமதி, அதிகரிப்பைக் காட்டுகிறது. அரிசி, தேங்காய், உடன் மீன், பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு, பப்பாசி, மரக்கறி, முட்டை, தேங்காய் எண்ணெய், பச்சை மிளகாய், மாட்டிறைச்சி என்பவற்றின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பே உணவுப் பொருட்களின் பெறுமதி அதிகரிப்புக்குக் காரணமாகும். எனினும் தேசிக்காய், கோழி இறைச்சி, வாழைப்பழம், மாம்பழம், செத்தல் மிளகாய், அன்னாசி, கருவாடு என்பவற்றின் விலைகளில் வீழ்ச்சி காணப்படுகிறது.

முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2016 டிசம்பர் இற்கான உணவல்லாப் பொருட்களின் செலவுப் பெறுமதி வீழ்ச்சியினைக் காட்டுகிறது. இது பிரதானமாக உணவல்லாப் பொருட்களின் பிரிவில் 'மது பானங்கள், புகையிலை மற்றும் போதைவஸ்து', "கேளிக்கை மற்றும் கலாச்சாரம்', 'வீடு, நீர், மின், எரிவாயு, ஏனைய எரிபொருள்' என்பவற்றில் ஏற்பட்ட செலவுப் பெறுமதி வீழ்ச்சியினாலாகும். எனினும் 'உணவு விடுதியும் ஹோட்டல்களும்', 'தளபாடம், குடித்தன உபகரணம், வழமையான குடித்தனப் பராமரிப்பு', 'போக்குவரத்து' மற்றும் 'உடையும் காலணியும்' ஆகிய உணவல்லாப் பொருட் பிரிவுகளின் செலவுப் பெறுமதியில் அதிகரிப்பு காணப்பட்டது. கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் 'நானாவிதப் பொருட்களும் சேவைகளும்' பிரிவிற்கான செலவுப் பெறுமதியில் மிகச்சிறியளவு அதிகரிப்புக் காணப்பட்டது. அத்துடன் 'சுகாதாரம்', 'தொடர்பாடல்', 'கல்வி' பிரிவுகளுக்கான செலவுப் பெறுமதியில் இம்மாதம், மாற்றம் எதுவும் காணப்படவில்லை.




## தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | வருடத்தின்மீது வருடம் பணவீக்க% |
|---|---|---|---|---|
| **2015** | டிசம்பர் | 113.2 | 1.1 | 4.2 |
| **2016** | ஜனவரி | 112.0 | -1.1 | -0.7 |
| | பெப்ரவரி | 110.8 | -1.1 | 1.7 |
| | மார்ச் | 110.0 | -0.7 | 2.2 |
| | ஏப்ரல் | 111.6 | 1.5 | 4.3 |
| | மே | 113.7 | 1.9 | 5.3 |
| | யூன் | 116.1 | 2.1 | 6.4 |
| | யூலை | 115.2 | -0.8 | 5.8 |
| | ஓகஸ்ட் | 113.3 | -1.6 | 4.5 |
| | செப்ரெம்பர் | 113.5 | 0.2 | 4.7 |
| | **ஒக்ரோபர்** | 114.7 | 1.1 | 5.0 |
| | நவம்பர் | 116.6 | 1.7 | 4.1 |
| | டிசம்பர் | 118.0 | 1.2 | 4.2 |

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்

தொ. இல.: 011-2147001 / 011-2147020